# வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2010 ஆம் ஆண்டு

---

## 1. ஒதுக்கீட்டு தலைப்பு – 112 வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

---

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இணைக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 ஆகஸ்ட் 08 ஆம் திகதி அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், காண்புகள், கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும், நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப்பெற்ற பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதொரு கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 ஆம் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்கும் வகையில் பேணப்படுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது பிழைகளின் நிமித்தம் ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களைத் கொண்டிராத கணக்குகளையும் இணைக்கக்கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் அவற்றை நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடல் அமுலாக்குதல் மற்றும் பேணுதல் இப்

பொறுப்புக்களில் உள்ளடக்கபொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பிரயோகித்தல், சந்தர்ப்பத்துக்கேற்றவாறு நியாயபூர்வமாக கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரித்தல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களின் நிலை இங்கு (அ) முதல் (எ) வரையான பொது அவதானிப்புகள் மற்றும் கீழே 1.4 முதல் 1.13 வரையான பந்திகளில் உள்ளடக்கப்பட்ட ஏனைய பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**(அ) வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்**

அமைச்சினால் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் கணக்காண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

(i) அமைச்சினால் 2011 மார்ச் 31 இல் உள்ளவாறும் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| தலைப்பு/ விடய இலக்கம் | கணக்குகளின் பெயர் |
|---|---|
| 112 | ஒதுக்கீட்டுக் கணக்கு |
| 11201 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு |

(ii) அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 470,181,889 தொகையும் இதில் அடங்கும்.

(ii) 01 வருடத்திற்கும் குறைவான மீதியின் கீழ் மீளாய்வாண்டின் போது இவ் அமைச்சின் கீழ் வேறான செயற்திட்டமாக செயற்படுத்தப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலனோம்பல் அமைச்சிற்குரிய ரூபா 4,137,230 தொகையான தீர்க்கப்படாத முற்பணங்கள் காணப்பட்டன.

(iii) 2011 ஏப்ரல் 30 வரை தீர்க்கப்பட்டிராத மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,630,139,722 ஆகும். 2011 யூன் 30 வரை இம் மீதியினை ரூபா 1,038,436,281 வரை மேலும் குறைக்கக் கூடியதாக இருந்தது என செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

(iv) 1996 ஏப்ரல் 20 ஆம் திகதிய நிதி திட்டமிடல் அமைச்சுச் சுற்றறிக்கை இல. எம்எப்6/1/1/96 இன் 2.4.1 ஆம் பந்தியின் பிரகாரம், உத்தியோகத்தர் நாட்டிற்குத் திரும்பி 30 நாட்களிற்குள் வெளிநாட்டுப் பயணச் செலவின முற்பணத்தைத் தீர்த்து கணக்கிடப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் தலைமை அலுவலகத்திலும் தூதுவராலயங்களிலும் 2011 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு அவ்வாறு தீர்க்கப்படாத போக்குவரத்துச் செலவின முற்பண மீதிகள் முறையே ரூபா 24,630,396 ஆகவும் ரூபா 8,208,723 ஆகவும் காணப்பட்டன.

(v) நி.பி.371(2) இன் பிரகாரம் குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி வழங்கப்பட்ட செயற்பாடு முடிவுற்ற உடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2010 திசெம்பர் 31 வரையும் ரூபா 312,620,141 கூட்டுத்தொகையான முற்பண மீதிகள் தீர்க்கப்படாது காணப்பட்டதுடன் இதில் ரூபா 85.4 மில்லியன் நிர்மாணிப்பிற்காகச் கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணமென செயலாளர் அறிவித்திருந்தார்.

**(ஊ) பொது வைப்புக் கணக்கு**

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| 11201 | 29,600,000 | 35,013 |

(ii) நிலுவைக் கடன் மீதி

----------------------------------

விடய இல. 11201 இன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,056,866 ஆனதுடன் இந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் காணப்பட்டது.

## 1.4. சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அமைச்சின் பொருளாதாரம் தொடர்புகள் பிரிவில் காணப்பட்ட பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ள இரண்டு கணனி அச்சீட்டு இயந்திரயங்கள் 2011 யூலை 01 ஆம் திகதி களஞ்சியப் பிரிவிற்கு மாற்றப்பட்டதை அடுத்து இதுவரையிலும் பயன்படுத்தப்படாத காணப்பட்டன.

(ii) மலேசியாவில் உள்ள இலங்கை தூதரகத்திற்காக 1996 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட காணி 14 ஆண்டுகாலமாக உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்தல்

வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரக உத்தியோகத்தர்களுக்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்ட, குடியிருக்காது கைவிடப்பட்ட 72 வீடுகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 10,881,629 தொகையான பாதுகாப்பு வைப்புத் தொகை மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. இவ் வைப்புக்களிடையே 35 வீடுகளுக்கான உரித்தான ரூபா 1,932,969 தொகையான வைப்புக்கள் 10 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்தவையாகக் காணப்பட்டதுடன் 34 வீடுகளுக்காக வைக்கப்பட்ட ரூபா 2,772,322 தொகையான வைப்புக்கள் இலண்டனில் உள்ள உயர்ஸ்தானிகர் காரியாலயம் மற்றும் அதனோடிணைந்த வீடுகளுக்கானவையாகும். பிணை வைப்புக்களை அறவிடுவதிலான நீண்ட கால தாமதம் கட்டுநிதிக் கணக்குகள் தீர்க்கப்படுவதிலும் பாதகமான தாக்கத்தினைச் செலுத்தியிருந்தது.

## 1.5 இணங்காமைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | 2009/03/24 ஆம் திகதிய 13/2008/11 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | 186,300 | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்துள்ள உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த எரிபொருள் படியாகச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் அப்படிகளைப் பெறும் சில உத்தியோகத்தர்கள் செயலாளரின் அங்கீகாரம் இன்றி கட்டளையின் அடிப்படையில் எரிபொருளைப் பெற்றிருந்தனர். மீளாய்வாண்டின் போதும் அவ்வாறு ஒதுக்கப்பட்ட 10 வாகனங்களுக்காக வழங்கப்பட்டிருந்த 1620 லீற்றர் எரிபொருட்களுக்காக |

உத்தியோகத்தர்கள் செலுத்த வேண்டிய விகிதாசார அளவு அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது எட்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அவ்வாறு அறவிடப்பட்டிராத விகிதாசார அளவின் பெறுமதி ரூபா 175,640 ஆகக் காணப்பட்டது.

## 1.6 செயலாற்றல்

2010 வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் அமைச்சின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

### (அ) போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத பிரதான செயற்பாடுகள்

2010 ஏப்ரல் 30 ஆம் திகதிய 1651/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இந்த அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சிற்காக 2010 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 13 மூலதனச் செலவு விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 25,016,550 கூட்டுத்தொகையான ஏற்பாடுகளில் எத்தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழுள்ள வெளிநாட்டு பயிற்சி நிலையம் ஸ்தாபிக்கப்படுவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 15,000,000 தொகையான ஏற்பாடுகள் நி.பி. 66 இன் மூலம் அமைச்சின் வேறு செயற்பாடுகளுக்காக மாற்றப்பட்டிருந்தன. இவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரிக்கான மூலதன ஏற்பாடுகளின் குறைவான பயன்பாடு அப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்ட செயற்பாடுகளின் செயலாற்றலின் நலிவை வெளிக்காட்டுகின்றன. இது தொடர்பாக செயலாளர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

³இதன் கீழுள்ள மூலதனச் செயற்திட்டங்களைச் செயற்படுத்தப்படுவதற்காக அமைச்சர் ஒருவர் இன்மையாலும், இந்த அமைச்சை வெளிநாட்டு அலுவல்கள்

அமைச்சுடன் ஒருங்கிணைக்கப்படுவதற்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட உலக வர்த்தக நிலையக் கட்டிடத்தில் காரியாலயத்திற்காக கொள்வனவு செய்யப்படுவதை நோக்காகக் கொண்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த மூலதன செலவின விடயங்களுக்காக செலவினத்தை மேற்கொள்ளாமையாலும் ஏற்பாடுகள் அனைத்தும் எஞ்சியுள்ளன.

**1.7 வங்கிக் கணக்குகளைச் செயற்படுத்தலிலான குறைபாடுகள்**

**(i) சீராக்கப்பட வேண்டிய மீதி**

2010 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த 27 வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்ட சீராக்கங்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் பின்வருமாறாகும்.

| சீராக்கம் தொடர்பான விபரம் | 06 -12 மாதங்கள் | 1 - 3 ஆண்டுகள் | 3 ஆண்டுகளுக்கு மேலானவை | கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தேறாத வைப்புகள் | 2,664,172 | 62,457 | 154,095 | 2,880724 |
| வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத காசோலைகள் | 39,716,146 | 780,027 | 311,555 | 40,807,728 |
| இனங்காணப்படாத வரவுகள் | 142,759 | 873,313 | - | 1,016,072 |
| இனங்காணப்படாத செலவுகள் | 1,981,546 | 338,135 | - | 2,319,681 |
| ஏனைய சீராக்கங்கள் | 355,206 | 4,248,413 | - | 4,603,619 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெளிநாடுகளில் உள்ள மூன்று இலங்கைத் தூதரகங்களிற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் இனங்காணப்படாத வேறுபாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 4,603,619 ஆகும்.

**1.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சு மேற்கொண்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

(அ) கொள்வனவு வழிகாட்டிகளிலிருந்து மீறல்

-------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் பல்வேறு நிறுவகங்களில் இருந்து வாகனங்கள் வாடகைக்குப் பெறப்படுவதற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படுவதற்கும் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனையவை

------------------

(i) அமைச்சில் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 4,473,520 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 40 கணனிகள் களஞ்சியத்தில் பெறப்படுகையில் கோரப்பட்ட மாதிரிகளிற்கு இணங்கும் வகையில் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து முறையான மதிப்பீடோ அல்லது உறுதிப்படுத்தலோ பெறப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது தனியார் நிறுவகத்தின் வாகனங்கள் வாடகைக்கு பெறப்படுவதற்காக ரூபா 1,851,296 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதில் வாகன ஓட்டம் தொடர்பாக எவ்வித தகவல்களும் இல்லாது மேற்கொள்ளப்பட்ட ரூபா 311,427 தொகையான மிகைக் கொடுப்பனவும், வாகனம் வாடகைக்கு வழங்கப்பட்ட நிறுவகத்தின் கோரல்கள் இல்லாதும் ஓட்டப் பதிவுகள் இன்றியும் 2009 ஆம் ஆண்டிற்காக 4 வாகனங்களுக்கு 15 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,107,121 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 1.10 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

---------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் நட்டங்களும் இழப்புகளும் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

தொகையான நிதி ஏற்பாடு நி.பி. 66 மாற்றல்கள் மற்றும் மேலதிக ஏற்பாடுகளில் இருந்து பெறப்பட்டிருந்தன.

(ஆ) கண்டி பல்லேகலேயில் இடம்பெற்ற 2010 ஆம் ஆண்டிற்கான தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக கண்காட்சிக் கொட்டகைகள் தயாரித்தல் மற்றும் திட்டமிடற் செயற்பாடுகளுக்காக வழங்குனர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகையில் அமைச்சினால் கொள்வனவு நடைமுறைகள் முறையாக பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்தக்காரரது இறுதி இன்வொயிஸ் தீர்க்கப்படுகையில் மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தின் பரிந்துரையின் பிரகாரம் ரூபா 5,000,000 தொகையான் கொடுப்பனவு முழுவதும் அதற்குரிய வரித்தொகையும் செலுத்தப்பட்டிருக்கையில் மீண்டும் கொள்வனவுக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் மேலும் ரூபா 2,922,663 தொகை காரணம் காட்டப்படாது செலுத்தப்பட்டிருந்தது. இம் மேலதிகக் கொடுப்பனவு 2011 தேசத்திற்கு மகுடத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்துடன் ஒப்பிடுகையில் சிக்கனமற்றதாக அவதானிக்கப்பட்டது.

(இ) வெளிநாட்டு தூதரகத்தில் சேவையை முடிவுறுத்தி மீள இலங்கைக்கு வருகைதரும் உத்தியோகத்தர்களின் பயணப் பொதிகள் துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்படுகையில் தொடர்ச்சியாக பாரிய தாமதங்கள் நிலவியதுடன் இக் காரணத்தினால் துறைமுக மற்றும் ஏனைய கட்டணங்கள் உயர்வடைந்திருந்தன. உத்தியோகத்தர்களின் தவறினால் ஏற்படும் தாமதக் கட்டணங்கள் அமைச்சின் வழிகாட்டி X 333Y இன் 14 ஆம் 15 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்படுவதற்கும் அப்புறப்படுத்தல் பிரதிநிதியின் தாமதத்தினால் ஏற்படும் தாமதக் கட்டணங்கள் அவருக்குச் செலுத்தப்படுகையில் கழிக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2010 திசெம்பர் மாதத்தில் 04 சந்தர்ப்பங்களின் போது 53 நாட்களுக்காக தாமதக் கட்டணமாக ரூபா 82,895 தொகை அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்ததாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

## 1.12. மனிதவள முகாமைத்துவம்

---

**(அ) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்கள்**